1987 ஏப்ரல் 1]

தமிழக அரசு ஹெலிகாப்டர்.

240—(*வினா எண் 7114) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டரை சுற்றுலா போக்குவரத்துக்குக் கொடுக்க அரசு முன்வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சுற்றுலா பணிக்காக அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டரை சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு மாற்ற ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இதைப் பயன்படுத்தும் திட்டம் பற்றி முழுமையாக ஆய்வு செய்த பின்பு இந்த ஹெலிகாப்டரை சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு மாற்றிக்கொள்ள இசைவு தந்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, சொந்தமாக ஹெலிகாப்டர் வைத்துக்கொள்வதால் அரசுக்கு மாதம் ஒன்றுக்கு எவ்வளவு செலவாகிறது? இந்தச் செலவை அரசு அதிகமென்று கருதுகிறதா? அல்லது அதனை பராமரிப்பு செய்வதில் ஏதாவது சிரமம் இருக்கிறதா? அப்படியிருக்குமானால் சொந்தத்தில் வைத்துக்கொள்வதை விடுத்து வாடகைக்கு எடுத்துக்கொள்வது சுலபமாக இருக்காதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, சொந்தமாக கார் வைத்துக்கொள்வதைவிட அவ்வப்போது வாடகைக்கு எடுத்துக் கொள்வது சில நேரங்களில் மட்டும் வசதியாக இருக்கலாம், ஆனால் சில அவசர காலங்களில் இது தேவைப்படுகிறது என்ற காரணத்தினால்தான் சொந்தமாக இருக்கவேண்டுமென்று அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது. வாடகைக்கு எடுப்பதென்றால் எல்லா நேரங்களிலும் அவசரத்திற்குக் கிடைக்கிற சூழ்நிலை இல்லாமல் இருக்கிற காரணத்தால் இது சொந்தமாக இருக்கவேண்டுமென்ற முடிவை அரசு எடுத்திருக்கிறது. ஆண்டுதோறும் பராமரிப்பிற்கு எவ்வளவு செலவாகிறது என்று கேட்டிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன், 1982–83-ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் இதன் பராமரிப்புக்குச் செலவாகி இருக்கிறது. எனவே அந்த வகையில் பார்க்கிறபோது அரசுக்குச் சொந்தமாக ஒரு ஹெலிகாப்டர் இருப்பது எப்போதுமே நல்லது தான். பல இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுகிற காலங்களில் இது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறதென்ற வகையில் இதைத் தொடர்ந்து வைத்துக்கொள்வது நல்லது என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. ஓ.ரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஒரு ஹெலிகாப்டர் மட்டும் இருப்பதால்தான் இது அடிக்கடி ரிப்பேர் ஆகிறது. திடீரென்று தமிழ்நாட்டில் வறட்சி, வெள்ளம் போன்று வருகின்றன. அரசாங்கத்தின் அத்தியாவசியத் தேவையை முன்னிட்டும், வெள்ளக் காலங்களில் பல உயிர்களைக் காப்பாற்றுகிற வகையிலும் மாவட்டத்திற்கு 'ஒரு ஹெலிகாப்டர் வாங்க அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேச ஆரம்பிக்கிறபோது தொகுதிக்கொன்று கேட்பார்கள் என்று நினைத்தேன். நல்ல வேளை, மாவட்டத்திற்கு ஒன்று என்று நிறுத்திக் கொண்டார்கள். இப்போது அந்த எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை. அது ஒன்றே போதுமென்று அரசாங்கம் கருதுகிறது.

தருமபுரி மாவட்டம் மொரப்பூரில் ரெயில்வே மேம்பாலம்.

241—(*வினா எண். 10580) திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், மொரப்பூர் ரெயில்வே லைனில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: தலைவர் அவர்களே, மொரப்பூர் ரெயில்வே லைனில் மேம்பாலம் கட்ட வேண்டுமென்ற கோரிக்கையை நீண்ட நாட்களாக கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். காரணம் மொரப்பூரில் மிகவும் முக்கியமான பாதையாக அது இருக்கிறது. குறிப்பாக ஏழெட்டு ஆண்டுக் காலமாக ஹரூர் தாலுக்காவிலிருந்து பாலக்கோடு சர்க்கரை ஆலைக்கு இரவு பகலாக லாரிகளில் கரும்பு எடுத்துப் போகிறார்கள். இரவு நேரங்களில் அந்த ரெயில்வே கேட்டை மூடிவிடுகிறார்கள். இதனால் போக்குவரத்தில் தடை ஏற்பட்டு விவசாயிகளுக்கு குந்தகம் ஏற்படுகிறது. ஆலைக்கு காலாகாலத்தில் போய் சேர வேண்டிய கரும்புப் போக்குவரத்தில் தடை ஏற்படுகிறது. பொது ஜனங்களுக்கு நிறைய இடையூறு ஏற்படுகிறது. ஆகவே அந்த மேம்பாலம் கட்டுவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். அதற்கு சாத்தியகூறுகள் இலையென்றால் அந்த ரெயில்வே லைனுக்கு கீழே இருக்கும் கீழ்ப் பாலத்தில் லாரிகளை அனுமதிப்பதற்கு இரயில்வே இலாக்காவுடன் தொடர்பு கொண்டு, அவர்களைத் தக்கமுறையில் அணுகி, அவர்களின் இசைவைப் பெற்றுத் தருவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.